**இலங்கை கால்பந்து சம்மேளனம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள், மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சம்மேளனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சங்கத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக கொள்வதற்காகவேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சங்கத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சம்மேளனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சங்கம் செயற்படுகின்றதா எனவும்இ

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்இ

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்இ

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டியவை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டின் போது தனியார் கட்டுமானக் கம்பனியொன்றுக்கு நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 1 மில்லியன் முற்பணம் வழங்கபபட்டிருந்த போதிலும், அது தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது இந்த பணத்தை அறவிடுவதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அல்லது உரிய நடவடிக்கை எடுக்கதற்கு இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் (குகுளுடு) புதிய நிர்வாகம் இணங்கியுள்ளது. | நிலுவைகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பல்வேறு வெளிவாரித் தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 19 மில்லியனான நிலுவை மீதியை 01 முதல் 08 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் அறவிடப்படாது காணப்பட்டதுடன், அதனை அறவீடு செய்யும் நடவடிக்கை நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் போது இந்த பணத்தை அறவிடுவதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அல்லது உரிய நடவடிக்கை எடுக்கதற்கு இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் (குகுளுடு) புதிய நிர்வாகம் இணங்கியுள்ளது. | நிலுவைகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| அ) | இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் விஞ்ஞாபனத்தின் 12 ஆம் பிரிவு | நிதிக் குழுவின் கொள்கைகள் மற்றும் அனைத்து செயல் நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்த பொருத்தமான நிதிப் பிரமாணங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த நிதிப் பிரமாணங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரையிலும் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்குரிய (குகுளுடு) எழுத்துமூல நிதிப் பிரமாணங்கள் இல்லை. | இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நிதி நடைமுறைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ஆ) | 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்மானியில் பிரசுரிக்கப்பட்ட விளையாட்டு சட்டங்களின் பிரிவு III இன் xi மற்றும் xii ஆம் பந்தி | சம்மேளத்தினால் நிறுவனத் திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இது குறித்து வைத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. | விளையாட்டு சட்ட விதிகளின் பிரகாரம் நிறுவனத் திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

சம்மேளனத்தின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 197,270,584 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 171,793,730 ஆகும். முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேறுகள் ரூபா 369,064,314 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செலவினங்கள் ரூபா 348,809,719 இனால் அதிகரித்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1994 ஆம் ஆண்டின் போது இலங்கை ஆண்கள் காலபந்துக் குழு 168 நாடுகளில் 139 ஆம் இடத்திலிருந்து, சர்வதேச மட்டத்தில் கால்பந்து விளையாட்டினை மேம்படுத்துவதற்காக சம்மேளனத்தினால் போதியளவில் நிகழ்ச்சித்திட்டமொன்றினை தயாரிக்காத காரணத்தால் 2014 ஆம் ஆண்டின் போது 205 நாடுகளில் 140 ஆவது இடம் மற்றும் 2022 ஆம் ஆண்டில் 211 நாடுகளில் 207 ஆவது இடத்தினையும் பெற்றுக்கொண்டது. மேலும், பாடசாலை கால்பந்து விளையாட்டினை மேம்படுத்தல் தொடர்பில் சம்மேளனத்தினால் போதிய கவனம் செலுத்தப்பட்டிராததுடன், 2021 ஆம் ஆண்டின் போது இதற்காக எதுவித நிதியும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கால்பந்து தொடர்பான தேசியக் கொள்கை போன்ற நிரந்தர மற்றும் கட்டமைப்புத் திட்டம் ஆகியவற்றை சரியான நேரத்தில் எதிர்காலத்தில் திருத்துதல் முக்கியமானது ஆகும். | கால்பந்தின் தரவரிசையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பயிற்றுவிப்பாளர்களின் சேவையை பெற்றுக்கொள்ளும் போது விளையாட்டு வீரர்களின் ஆற்றல்கள் மற்றும் செயலாற்றலை பரீட்சிப்பதற்காக மாதாந்த மற்றும் காலாண்டு ரீதியான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பில் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், மீளாய்வாண்டினுள் பயிற்றுவிப்பாளர்களுக்கு ரூபா 30 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கு முறையான செயலாற்றல் மதிப்பீடு செய்யும் நடைமுறையொன்று இலங்கை கால்பந்து சம்மேளனத்திடம் (குகுளுடு) காணப்படவில்லை. | பயிற்றுவிப்பாளர்களின் செயலாற்றலை மதிப்பீடு செய்வாற்காக நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 மார்ச் 10 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2166/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் 11 (xxi) ஆம் இலக்க பிரிவிற்கிணங்க பெறுகைகள் மற்றும் விலைக்கேள்விகளை கையளிக்கும் போது பின்பற்றுவதற்கு தேசிய விளையாட்டுச் சங்கங்களால் சட்ட ரீதியாக உருவாக்கப்பட்ட பெறுகைகள் வழிகாட்டியொன்று இல்லாத போது அரச பெறுகைகள் வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், சம்மேளனத்தினால் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(ஆ) 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி 4.2.1 (அ), (ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம், பிரதான பெறுகைகள் திட்டம் மற்றும் அதற்கடுத்த ஆண்டுக்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், சம்மேளனம் வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.<br><br>(இ) 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி 2.14 இற்கு மேலதிகமாக இலக்கம் 35 கொண்ட பதிலீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக, ஆகக் குறைந்தது 3 விலைக்கேள்விகளை பெற்றுக்கொள்ளாதும் உரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாதும் 60 சந்தர்ப்பங்களில் ரூபா 101 மில்லியன் பெறுமதியான பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் அங்கீகாரமின்றி 08 சந்தர்ப்பங்களில் ரூபா 5 மில்லியனை விட கூடிய பெறுமதியுடைய பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவற்றின் கூட்டுத்தொகை ரூபா 85.8 மில்லியன் ஆகும். | இலங்கை கால்பந்து சம்மேளத்திற்கு (குகுளூடு) உரியதாக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையொன்று காணப்படுகின்ற போதிலும், அது இதுவரை நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டப்பூர்வமாக உருவாக்கப்பட்ட பெறுகைகள் வழிகாட்டுதல்கள் அங்கீகரிக்கப்படும் வரை, பெறுகைகள் மற்றும் விலைக்கேள்வி கையளித்தல் தொடர்பாக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டுதல்களை சம்மேளனம் பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா 2.8 மில்லியன் செலவிடப்பட்டு சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அத்தியாயம் 4 இன் பிரகாரம் அளவிடைப் பத்திரங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் (டீழுஞ) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் விரிவான பொறியியல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பங்களாதேசம் மற்றும் இலங்கை ஆகியவற்றுக்கிடையிலான போட்டியின் நேரடி ஒளிபரப்பிற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்த நிறுவனத்தை தெரிவு செய்தமையுடன் தொடர்புடைய பெறுகை நோக்கத்திற்காக ரூபா 2 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் மில்லியன் 10,0000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், நேரடி ஒளிபரப்பிற்காக இலங்கையின் பயன்பாடு தொடர்பான தகவல்கள் மற்றும் இந்த நிறுவனத்தை தெரிவு செய்வதற்கான நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் ஆகியவை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்காய்வு அலுவலகத்தினால் (யுேழு) கோரப்பட்ட எந்த ஆவணமும் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் நிதித் திணைக்களத்திடம் (குகுளுடு) காணப்படவில்லை. | ஆவணங்கள் முறையாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |